ISSN : 2456-821X அவையம் 3(2) Nov.2019 P.No. : 55 - 67




==========================================================================================

# சங்க இலக்கியங்களில் பாண்டியர்

***மு.கயல்விழி***
*உதவிப் பேராசிரியர்(தமிழ்)*
*பச்சையப்பன் மகளிர் கல்லூரி*
*காஞ்சிபுரம்.*

***கட்டுரை பெறப்பட்டது :* 03.11.2019** **ஏற்கப்பட்டது : 28.11.2019**

==========================================================================================

***முன்னுரை***

*பாண்டியர்கள் தென் தமிழ்நாட்டை ஆண்ட அரசு மரபினர் ஆவர். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையுடையவர்கள். இவர்கள் சந்திர குலத்தைச் சார்ந்தவர்கள். வேம்பு மாலையை அணிந்தவர்கள். சங்க காலம் தொட்டு பதினேழாம் நூற்றாண்டு வரை தமிழகத்தை ஆட்சி செய்தவர்கள். பாண்டியர்கள் போல் இவ்வளவு நீண்டகாலம் ஆட்சி புரிந்த அரசு மரபினரை உலக வரலாற்றில் காணவியலாது. பாண்டியர் தோற்றம் குறித்து தெளிவான முடிவு ஏதும் இதுவரை எட்டப்படவில்லை. தொடக்கத்தில் இவர்கள் தொன் மதுரையிலிருந்து ஆட்சி புரிந்தனர். அது குமரிக் கடலில் பஃறுளி ஆற்றங்கரையில் அமைந்திருந்தது. அது கடல் கோளால்(Tsunami) அழிவுற்றது. பின்னர் கபாடபுரம் அவர்கள் தலைநகராயிற்று. அதையும் கடல் கொண்டு போனது. இறுதியாய் கூடல்நகர் என்று புகழ் பெற்ற தென்மதுரை அவர்கள் தலைநகராயிற்று. இது தாமரை மலர்போல் வடிவமைக்கப் பட்டிருந்தது.*

*“மாயோன் தொப்பூழ் மலர்ந்த தாமரைப்*

*பூவோடு புரையும் சீர் உளர்”*

*(பரிபாடல் பாடல்:8 வரிகள்:1-2)*

*அன்னிய நாட்டுப் பயணியான தாலமி என்பவர் கி.பி.50ல் இந்நகரைக் கண்டு “மதேரே(Mathrei) என்று புகழ்ந்துரைக்கிறார். இதன் மூலம் அவர் காலத்தில் இந்நகர் சிறப்புற்றிருந்ததை அறியமுடிகின்றது.*

*பாண்டியர்களின் துறைமுகநகரங்கள் தொண்டி, கொற்கை, விழிஞ்சம் மற்றும் குமரி ஆகியனவாம். கொற்கை நகர் முத்துக் குளிப்பதற்குப் புகழ் பெற்றது. பாண்டியர்கள் எப்பொழுதும் கடல் வாணிகத்திற்கு முக்கியத்துவம் நல்கியவர்கள். இலங்கையின் மகாவம்சம் என்று நூலின் ஆசிரியரும், கிரேக்க நாட்டு மெகஸ்தனிஸ் என்ற தூதுவனும் பாண்டியரின் வணிகத்தைப் பற்றி பல செய்திகளை அளிக்கின்றனர். பரிபாடல் என்னும் நூலும், மாங்குடி மருதனார் இயற்றிய மதுரைக்காஞ்சியும் பாண்டியரை புகழ்ந்துரைக்கின்றன. பாண்டியநாடு பல பகுதிகளாக பிரிக்கப்பட்டு பல இளவரசர்களால் ஆளப்பட்டது. இதுவே அவர்கள் வீழ்ச்சிக்குக் காரணமாயிற்று. புராதன பாண்டியரை சங்க இலக்கியங்கள் சாலவும் புகழ்கின்றன. அவற்றை ஈண்டு ஆராய்வோம்.*

***வடிவம்பல பாண்டியன்:-***

*சங்க இலக்கியங்கள் சுட்டும் முதல் அரசன் இவனே. தொன்மதுரை இவன் தலைநகர். “நெடியோன்” என்று அழைக்கப்பட்டதால் நீண்ட காலம் இவன் ஆட்சி செய்திருக்கவேண்டும். பஃறுளி ஆறு இவனாலே வெட்டப்பட்டது. அந்நதியின் கரையில் கடல் தெய்வத்திற்கு கோயிலெடுத்து விழாக்கொண்டாடினான்.*

*“முந்நீர் விழவின் நெடியோன்*

*நுல்நீரப் பஃறுளி மணவினும் பலவே”*

*(புறநானூறு பாடல்:9 வரிகள்:10-11)*

*கடல்கோளுக்கு முன் இருந்த பெரிய நிலப்பரப்பை இவன் ஆட்சிசெய்தான். இவன் பகை மன்னர் பலரை வென்று பரந்த பாண்டிய அரசை உருவாக்கினான்.*

*"நுலம்தந்த போர் உதவி*

*போலந்தார் மார்பில் நெடியோன் உம்பல்"*

*(மதுரைக் காஞ்சி வரிகள்:60-61)*

*சங்கம் வைத்து தமிழ் வளர்த்தவன் இவனே. முதல் தமிழ் நூலான தொல்காப்பியம் இவன் அவையில் அரங்கேறியது.*

***நெடுஞ்செழியன்:-***

*இவன் கி.மு.இரண்டாம் நூற்றாண்டைச் சார்ந்தவன். தலையாலங்கானத்து நெடுஞ்செழியனுக்கு மூத்தவன். "கடலன்", "வழுதி", "பணவன்" என்றெல்லாம் புகழப்பட்டான். சமண சமயத்தை ஆதரித்தவன். நந்தி என்ற சமண முனிவருக்கும், அவர் சீடன் ஆதன் என்பவனுக்கும் படுக்கைகள் அமைத்துத்தந்தான் என்பதை மீனாட்சிபுரம் கல்வெட்டுகள் மூலம் அறியலாம்(ARE.NO:460/1906). இவன் சிறந்த கல்வியாளன், புலவர்களைப் போற்றும் பண்பாளன். சோழன் கரிகாலனின் சமகாலத்தவன். நீதி நெறி வழுவாமல் ஆட்சி செய்தவன். கோவலன் கொலைக்குக் காரணமாக அமைந்தவன். தன் செங்கோல் வழுவியது கண்டு அக்கணமே உயிர் துறந்தான். ஆரியர்கள் படையெடுத்து வந்தபோது அப்படையெடுப்பை முறியடித்து விரட்டினான்.*

***பல்யாகசாலை முதுகுடுமி பெருவழுதி:-***

இப் பாண்டியன் பல யாகங்கள் புரிந்தவன் என்பது இவன் பெயர் மூலமாகவே அறியலாம். ஆயிரத்திற்கும் மேற்பட்ட வேள்விகளைப் புரிந்தவன் என்று சின்னமனூர் செப்பேடுகள் இவனைப் புகழ்கின்றன. இவன் பெரும் போர்வீரனாக அறியப்பட்டவன். இமயம் வரை படையெடுத்து பகை அரசர்களை வென்று தன் ஆதிக்கத்தைப் பரப்பினான்.

"வடா அது பனிபடு நெடுவரை வடக்கும்

தெனாஅது உருகெழு குமரியின் தெற்கும்"

(புறநானூறு பாடல்:6 வரிகள்:1-2)

இவன் பெரும் வெற்றி வீரனாகத் திகழ்ந்தான் என்று இலக்கியங்கள் இவனைச் சிறப்பிக்கும்.

"பகைபுலம் மரிஇய தகைப்பெருந் சிறப்பின்

குடுமிக் கோமிற் கண்டு"

(புறநானூறு பாடல்:64 வரிகள்:5-6)

அதே நேரம் வறியவருக்கும், புலவர்களுக்கும் வாரி வழங்கும் நல்லியல்பு கொண்ட வள்ளலாகத் திகழ்ந்தான்.

"பாணர் தாமரை மலையவும் புலவன்

பூநுதல் யானையோடு புனை தேர் பண்ணவும்"

(புறநானூறு பாடல்:12 வரிகள்:12-136)

**முடத் திருமாறன்:-**

இம்மன்னன் காலத்தில்தான் கடல்கோள் நிகழ்ந்தது. தொல்மதுரையும், பஃறுளி ஆறும், குமரிக்கடலும் கடலில் முழ்கி மறைந்தன. எனவே தன் தலைநகரைக் கபாடபுரத்திற்கு மாற்றினான்.

*சிறிது காலத்தில் அந்நகரும் கடலில் மூழ்கி மறைந்தது. பெரும் பொன்னும், பொருளும் மறைந்ததுடன், அரிய தமிழ்நூல்களும் கடல் கொண்டுபோயிற்று. எனவே தன் தலைநகரைக் கூடல் நகர் என்று அழைக்கப்பட்ட மதுரைக்கு மாற்றிக்கொண்டான். இவன் சேரமன்னன் குட்டுவன் சேரல் என்பவனின் நண்பனாகத் திகழ்ந்தான். போரில் முடமானதால் முடத்திருமாறன் என்ற அழைக்கப்பட்டான்.*

***கருங்கை ஒள்வாட் பெரும்பெயர்வழுதி:-***

*இப்பாண்டிய மன்னன் வலிமையான கைகளை உடையவன். மிகுந்த வாள் வலி கொண்டவன் என்று இலக்கியங்கள் இவனைச் சிறப்பிக்கின்றன.*

*"பெரும்பெயர் வழுதி கூடல் அன்னதன்*

*அருங்கடி வியல்நகர் சிலம்பும் கழியாள்"*

*(அகநானூறு பாடல்:315 வரிகள்:7-8)*

***பாண்டியன் அறிவுடைநம்பி:-***

*பாண்டியன் அறிவுடை நம்பி கல்வி கேள்விகளில் சிறந்தவன். மிகச் சிறந்த கவிஞன். பல தமிழ்பாக்களை இயற்றியவன். கோப்பெருஞ் சோழனின் சமகாலத்தவன். மக்கள் நலம் பேணும் அரசனாகத் திகழ்ந்தவன்.*

*"அறிவுடை வேந்தன் நெறி அறிந்து கொளினே"*

*(புறநானூறு பாடல்:184 வரி:5)*

***ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்:-***

*இவன் சிறந்த போர்வீரன். ஒல்லையூர் என்ற எல்லையைச் சோழன் கைப்பற்றிய பொழுது படையெடுத்துச் சென்று அவனைத் தோற்கடித்து அதை மீட்டெடுத்ததால் "ஒல்லையூர் தந்த" என்ற பட்டம் பெற்றவன். இவன் தமிழ் பிறந்த பொதிகை மலையை சார்ந்த திதியன் என்ற அரசனின் சமகாலத்தவன்.*



AD BONUM OMNE INST OPUS RUCTI
SACRED HEART COLLEGE

"சேல் சமம் கடந்த வில் கெழுதடக்கைப்

போதியிற் செல்வன் பொலந்தேர்த் திதியன்"

*(புறநானூறு பாடல்:246 வரிகள்:14-15)*

*தீக்குளிக்கும் வழக்கம் சங்க காலத்தில் இருந்தது என்பதை இவன் இறந்தபோது இவன் மனைவி பெருங்கோப்பெண்டு என்பவள் தீக்குளித்து மாய்ந்ததை கொண்டு அறியலாம்.*

"இதழ் அவிழ்ந்த தாமரை

நூள் இரும் பொய்கையும் தீயூம் ஓரற்றே"

*(புறநானூறு பாடல்:25 வரிகள்:19-20)*

***பசும்பூண் பாண்டியன்:-***

*இவன் புகழ் மிக்கவன் என்பதை கீழ்கண்ட அடிகள் உணர்த்தும்:-*

"பலர் புகழ் திருவின் பசும்பூட் பாண்டியன்"

*(அகநானூறு பாடல்:338 வரி:5)*

*இவனது அரசில் ஆய்நாடு, கொங்கு நாடு, மலை நாடு போன்றவை இடம் பெற்றிருந்தன. பகைவரை வென்று ஈட்டிய பொன்னைக் கொண்டு ஆபரணங்கள் சூட்டி மகிழ்ந்தான். நான்முடிச்சேரல், அதியமான் அஞ்சி, நன்னன் போன்ற அரசர்களின் சம காலத்தவன். தகடூரைத் தாக்கிக் வெற்றி பெற்றான். நெடுமிடல் என்பவன் இவனுடைய உற்ற நண்பன். இவனுடைய படைக்கு நெடுமிடல் தலைமை தாங்க சேரநாட்டின் மீது படையெடுத்தான். இப்படையெடுப்பு படுதோல்வியில் முடிவடைந்தது. நெடுமிடல் வீரமரணம் அடைந்தான்.*

"பசும்பூட் பாண்டியன் வினைவல் அதிகன்

களிரோடு பட்ட ஞான்றை

ஒளிறுவாட் கொங்கர் ஆர்பினும் பெரிதே''

(அகநானூறு பாடல்:162 வரி:4)

தோல்வியால் துவண்டுவிடாமல் மீண்டும் படைதிரட்டி ஆய் அண்டிரன் தலைமையில் ஒரு படையை அனுப்பினான். இப்படை கொங்கு நாட்டை வென்று தீக்கிரையாக்கியது.

''வாடாப் பூவின் கொங்கர் ஒட்டி

நாடுபல தந்த பசும்பூப் பாண்டியன்''

(குறுந்தொகை பாடல்:393 வரிகள்:4-6)

இறுதியாக துளு நாட்டின் மீது படையெடுத்தான் நன்னன் என்ற அரசன் மிஞிலி என்ற தன் படைத்தலைவன் மூலம் இப்படையெடுப்பை எதிர்த்தான். இதில் பாண்டியப் படைகள் அமோக வெற்றி பெற்றன.

''கூட்டு எதிர் கொண்ட வாய்மொழி மிஞிலி

புள்ளிற்கு ஏமம் ஆகிய பெரும்பெயர்

வேள்ளத் தானை அதிகாற் கொன்று''

(அகநானூறு பாடல்:253 வரிகள்:4-5)

**தலையாலங்கானத்து செறுவென்ற நெடுஞ்செழியன்:-**

பாண்டிய அரசர்களில் தலை சிறந்தவனாகப் போற்றப்படுபவன். இவன் சிறந்த போர்வீரன், மேம்பட்ட கல்வியாளன், நல்ல பண்பாளன். இவனது தந்தை சித்திரமாடத்து துஞ்சிய நன்மாறன். ஆவான். ''ஆடு போர்ச்செழியன்'', இயல்சேர் செழியன்'', ''கொடித்தேர் செழியன்'', ''கொற்றச் செழியன்'',''மறப்போர் செழியன்'' என்றெல்லாம் இலக்கியங்கள் இவனைப் புகழ்கின்றன. மதுரைக்காஞ்சி மற்றும் நெடுநல்வாடை ஆகிய நூல்கள் இவனைப் புகழ்கின்றன. பசுமையான பொன்னாலான அணிகலன்களை அணிவதில் நாட்டமுள்ளவன். இவன் இளம் வயதுடையவன்

என்பதால் இவனை அழிக்க முனைந்த சேரன், சோழன், திதியன், எழினி, எருமையூரன், பொருணன், வெண்மான் போன்ற எழுவரை கூடற் பரந்தலை என்ற இடத்தில் தோற்கடித்தான்.

*"போய்யா விழவின் கூடற் பறந்தலை"*

*"இரங்கு இசை முரசம் ஒழிய பரந்து அவர்*

*ஓடு புறம் கண்ட ஞன்றை"*

*(அகநானூறு பாடல்:142 வரிகள்:11-13)*

இப்போரில் சேரனும், சோழனும் கொல்லப்பட்டனர். இதை

*"உடல் அருந் துப்பின் ஒன்றுமொழி வேந்தரை*

*அனங்கு அரும் பறந்தலை உணங்கப் பண்ணி"*

*(அகநானூறு பாடல்:116 வரி:14)* மற்றும்

*"ஆலங்கானத்து அஞ்சுவர இருத்து*

*அரசு பட அமர் உழக்கி*

*முரசுகொண்டு களம் வேட்ட*

*அடுதிறல் உயர்புகழ் வேந்தே"*

*(அகநானூறு பாடல்:175 வரிகள்:10-11)* என்ற பாடல்கள் மூலம் உறுதிப்படுத்த முடிகின்றது.

**கானப்பேர்கடந்த உக்கிரப் பெருவழுதி:-**

இவன் கானப்பேர் என்ற ஊரை வென்றவன். அது தற்போது காளையார்கோயில் என்று அழைக்கப்படுகிறது. இவன் இராஜசூயம் வேட்ட பெருநற்கிள்ளி மற்றும் மாந்தரஞ்சேரல் ஆகியோரின்

சமகாலத்தவன். வேங்கை மார்பன் என்ற அரசனைத் தோற்கடித்து கானப்பேர்க் கோட்டையை வென்றான்.

"அருங் குரும்பு உடைத்த கானப்பேர் எயில்

கருங் கைக் கொல்லன் செந் தீ மாட்டிய

இரும்பு உண் நீரினும் மீட்டற்கு அரிது என

வேங்கை மார்பன் இரங்க"

(புறநானூறு பாடல்:21 வரிகள்:6-9)

**வெள்ளியம்பலத்து துஞ்சிய மாறன் வழுதி:-**

இப் பாண்டியன் கல்வி கேள்விகளில் சிறந்தவன். புலவர்களைப் போற்றும் பண்பாளன். சோழன் திருமாவளவனின் உற்ற நண்பன். கூடல் நகரை இவன் வெல்ல சோழன் இவனுக்கு உதவினான். இருவரும் நெருங்கிய நண்பர்கள்.

"பால்நிற உறுவின் பனைக்கொடியோனும்

நீள் நிற உருவின் நேடியோனும்"

(மதுரைக் காஞ்சி வரிகள்:126-127)

**கூடகாரத்து துஞ்சிய மாறன் வழுதி:-**

கூடகாரம் என்ற இடத்தில் நடைபெற்றப் போரில் இவன் மரணமடைந்தான். இவன் கிள்ளிவளவனின் சம காலத்தவன். பெரும் வீரன் என்பதுடன் குடிமக்கள் மீது அன்புள்ளம் கொண்டவனாகவும் திகழ்ந்தான். வட இந்திய மன்னர்களின் படையெடுப்பைத் தோற்கடித்து விரட்டினான்.

"வடபுல மன்னர் வாட அடல் குறித்து

இன்ன வெம் போர் இயல் தேர்வழுதி''

*(புறநானூறு பாடல்:52 வரிகள்:5-6)*

இவன் காலத்தில் குட்டுவன் சேரல் பாண்டிய நாட்டின் மீது போர்த்தொடுத்தான். இப்போரில் அவன் தோற்று சிறையும்பட்டான். பின்பு தந்திரமாக சிறையிலிருந்து தப்பினான். எனவே இவனைப் பழிவாங்க எண்ணிய பாண்டியன் சேரநாட்டின் மீது படையெடுத்து வெற்றி பெற்று அங்கிருந்த மந்திரப் பாவைகளைக் கவர்ந்து வந்து மதுரையில் நிறுவினான்.

''அருந் சமம் கடந்து படிமம் வவ்விய

நெடுநல்யானை அடுபோர் செழியன்''

*(அகநானூறு பாடல்:148 வரிகள்:11-12)*

தான் தோற்கடித்த நாடுகளை எரியூட்டினான் என்பதை கீழ்கண்ட பாடலால் அறியலாம்.

''நாடு சுடு கமழ் புகழ் எறித்தலானே''

''ஏம நன்னாடு ஒள் எரி ஊட்டினை''

*(புறநானூறு பாடல்:6 வரி:22)*

தென் தமிழ்நாட்டின் பரதவர் மீது தன் கவனத்தை செலுத்தினான். தென் தமிழ்நாட்டின் வலிமையான பழங்குடிகளாகிய பரதவரை அடக்கி ஒடுக்கினான்.

''தென் பரதவர் மிடல் சாய''

*(புறநானூறு பாடல்:378 வரி:1)*

''தென் பரதவர் போர் ஏறே''

*(மதுரைக் காஞ்சி வரி:144)*

கொங்கர்களோடு போரிட்டு வாகை என்ற இடத்தில் அவர்களையும் வென்றான். குட்ட நாட்டையும் வென்று நெல்லியனூர், முதுவெள்ளி, முதுபொழில் மண்டிலம் போன்ற ஊர்களை கைப்பற்றினான். தன் வாழ்நாளில் பல வேள்விகள் செய்து புகழ் பெற்றான். இதனால்

"வெள்ளி முற்றிய வாய் வாழ் வேந்தே"

(புறநானூறு பாடல்:26 வரி:15)

என்று இவனை மாங்குடிக் கிழார் புகழ்கின்றார்.

**இளவந்திகைப் பள்ளி துஞ்சிய நன்மாறன்:-**

இம்மன்னன் இளவந்திகை என்ற சோலைவனத்தில் மரணமடைந்தால் இப்பெயர் பெற்றான். இவன் பேராற்றலும், பெரும் வீரமும் ஒருங்கே கொண்டவன். கொற்கை நகரை தலைநகராகக் கொண்டு ஆண்டவன் இவனே. இம்மன்னன் சினத்தில் எமனையும், வலிமையில் பலராமனையும், புகழில் திருமாலையும், நினைத்ததை முடிப்பதில் முருகக் கடவுளையும் ஒத்தவனாகத் திகழ்ந்தான்.

"கூற்று ஒத்தீயே மாற்று அருந் சீற்றம்

வலி ஒத்தீயே வலி யோனை

புகழ் ஒத்தீயே இகழுநர் அடுநனை

முருகு ஒத்தீயே முன்னியது முடித்தலின்"

(புறநானூறு பாடல்:56 வரிகள்:11-14)

**பன்னாடு தந்த மாறன் வழுதி:-**

இப்பாண்டிய மன்னனே நற்றிணையைத் தொகுத்தவன். "முத்தமிழ் அறிஞன்""பன்னாடு தந்தான்"என்று புகழப்பட்டான். வடநாட்டு மன்னர்களை வென்றவன் என்று அறியப்படுகின்றான்.

"வடபுல மன்னர் வாட அடல் குறித்து

இன்னா வெம் போர் இயல் தேர் வழுதி”

(புறநானூறு பாடல்:52 வரிகள்:5-6)

***பழையன் மாறன்:-***

*இவன் மோக்கூர் என்ற ஊரை ஆண்டவன். கோசர்கள் படையைத் தோற்கடித்தவன். இவன் சோழன் கிள்ளிவளவனால் தோற்கடிக்கப்பட்டு மதுரையில் வீரமரணமடைந்தான்.*

“மாடமலி மறுகின் கூடல் ஆங்கண்

வெள்ளத் தனையோடு வேறு புலத்து இறுத்த

கிள்ளி வளவன் நல் அமர் சாஅய்”

(அகநானூறு:346 வரிகள்:20-22)

***முடிவுரை:-***

*பாண்டியர் பழமையும் பெருமையும் கொண்ட அரசு மரபினர் ஆவர். முடியுடை வேந்தரில் முதன்மையானவர்கள் இவர்களே. பாண்டியரையும் தமிழையும் பிரிக்கவியலாது. இவர்கள் தமிழ் பிறந்த பொதிகை மலைக்குச் சொந்தக்காரர்கள். சங்கம் வைத்து தமிழ் வளர்த்த பெருமையுடையவர்கள். புராதன சிறப்புடைய மதுரை மாநகரை ஆண்டவர்கள். வீரமும், விவேகமும், தன்மானமும், தயாளமும், பொறையும் ஒருங்கே கொண்டவர்கள். நீதியை உயிரினும் மேலாகப் போற்றியவர்கள். அது தவறிய போது உயிர் நீக்கவும் தயங்காத கவரிமான் அன்னவர்கள். அவர்கள் சமய சமரச நோக்கம் கொண்டவர்கள். புலவரைப் போற்றும் பண்பாளர்கள். பல பாண்டிய மன்னர்கள் சிறந்த கவிஞர்களாகவும், ஒப்பற்ற அறிஞர்களாகவும் திகழ்ந்தனர். பாண்டியர்கள் அயல்நாட்டு வணிகத்தைப் போற்றிப் புரந்தவர்கள். பல அயல்நாட்டுப் பயணிகள் பாண்டிய நாட்டைக் கண்டு வியந்து பாராட்டிச் சென்றுள்ளனர். சங்க கால*

பாண்டிய மன்னர்கள் மறைந்தாலும் அவர்கள் இலக்கியங்களிலும், வரலாற்று ஏடுகளிலும், கல்வெட்டுகளிலும், மக்கள் மனதிலும் வாழ்ந்து வருகின்றனர்.

***Expansion:-***

*ARE:-Annual Report on Indian Epigraphy*

**கருவிநூற் பட்டியல்:-**


*1.புறநானூறு*

*2.அகநானூறு*

*3.மதுரைக்காஞ்சி*

*4.குறுந்தொகை*

*5.பரிபாடல்*

*6.Sastri.K.A.N,The Pandiyan Kingdom,London,1929.*

*7.இராமன்.கே.வி, பாண்டியர் வரலாறு, சென்னை, 1978.*

*8.சதாசிவப் பண்டாரத்தார். தி. வை, பாண்டியர் வரலாறு, சென்னை, 1952.*

*9.இராஜசேகரத் தங்கமணி. ம, பாண்டியர் வரலாறு, சென்னை, 1978.*

*10.தமிழக வரலாறு-பாண்டியர் காலம், சென்னை, 2000.*

*11.தமிழக வரலாறு-சங்க காலம், சென்னை, 1983.*